1986 மே 13]

நீலகிரி மாவட்ட கூட்டுறவு விற்பனைச் சங்கம்.

773—(*வினா எண். 9125)—திரு. மா. சின்னராசு மற்றும் திரு. கே. உச்சி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்ட கூட்டுறவு விற்பனைச் சங்கம் (NCMS) காய்கறிகளை பக்குவப்படுத்தி பாதுகாத்து விற்பனை செய்ய குளிர் பதனிடும் நிலையத்தை அச்சங்கத்தின் விற்பனை மையமான மேட்டுப்பாளயத்தில் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : சாத்தியக்கூறுகள் ஆராயப்படுகின்றன.

திரு. கே. உச்சி : மாண்புமிகு தலைவர் அவர்களே, சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார். மிக்க நன்றி. ஆனால் ஆராயப்பட்டு எப்போது அந்தப் பணிகள் தொடங்கப்படும்? காரணம் அங்கேயுள்ள காய்கறி வியாபாரிகள் மிகவும் அவதிப் படுகிறார்கள். அதிகமாக விளையும் நேரத்தில் போதுமான விலை கிடைப்பதில்லை. குறைந்த நேரத்தில், அதை பக்குவப் படுத்துவதற்கு இடம் இல்லை. ஆகவே உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–20)

மாண்புமிகு திரு. கே. கே. எஸ்.எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உச்சி அவர்களும் நானும் சேர்ந்துதான் அந்த இடங்களை எல்லாம் பார்த்தோம். அங்கே சாத்தியக்கூறுகள் ஆராயப்படுகிறது என்று சொன்னால், அங்கே எந்த அளவுக்கு கெப்பாசிட்டி உள்ள குடோன் வேண்டும் என்பதைப் பார்த்து எந்த எந்த மாதிரி அங்கே அதிகமாக ஸ்டாக் வைத்து செயல் படுத்தலாம் என்பதைப் பார்த்து, அதற்கு ஏற்றவாறு கட்டுவதற்குவேண்டிய நடவடிக்கைகளைத் தான் — சாத்திய கூறுகளை ஆராய்ந்து அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. கல்லன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை தலைமையகத்தில் வைத்தால் 'மெயின்டனன்ஸ் காஸ்டு' குறைவாகவும், டிமாண்டுக்கு ஏற்ப சப்ளை செய்வதற்கும் வசதியாக இருக்கும். ஆகவே இந்த ஏர் கண்டிஷன் நிலையத்தை உதகையில் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். ;எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரியில் வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். அங்கே வேண்டியது இல்லை. அதைவிட கீழே தான் அந்த விவசாயிகள் அவைகளை விற்பதற்கு மேட்டுப் பாளையத்திற்கு தான் கொண்டு வருவார்கள். அங்கே தான் அவைகளை வைத்து இருப்பதற்கான வசதிகள் இல்லை. ஆகவே தான் விற்க வேண்டிய அளவுக்கு வைத்து இருப்பதற்கு வசதி செய்வதற்காக நாங்கள் செய்ய இருக்கிறோம். மேட்டுப்பாளையத்தில் தற்போது வைப்பதற்கு வேண்டிய சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்து கொண்டு இருக்கிறோம்.

திரு. கே.ா வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய அந்த விவசாயிகள் காய்கறிகளை கொண்டு வந்து மேட்டுப்பாளையத்தில் விற்பதற்கான அந்த நீலகிரி மாவட்ட கூட்டுறவு அமைப்பு இப்போது கீழே செயல்படுத்த முடியாமல் கீழே இருக்கக்கூடிய சில தனிப்பட்ட வியாபாரிகள் இதன் செயல்பாட்டை தடுத்து அந்த கூட்டுறவு அமைப்பு செயல்படாமல் தடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். இதை அரசு அறியுமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதைத் தடுத்து அந்த கூட்டுறவு நிறுவனம் மேட்டுப் பாளையத்தில் செயல்படுவதற்கு உரிய ஏற்பாடுகளை அரசு செய்து கொடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவது போல் அங்கே இருக்கக்கூடிய சில தனிப்பட்ட வியாபாரிகள் அங்கே என்.சி.எம்.எஸ். சரியாக செயல்படாமல் இருப்பதற்கு வேண்டிய அந்தத் தடைகளை செய்து கொண்டு இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. உச்சி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு போன்றவர்களும் மிகவும் ஆர்வத்தோடு அதிலும் கோர்ட் வரை வந்தார்கள். வந்து இருந்து அதை முடிவு செய்து இப்போது மிக சிறப்பாக பழையபடி என்.சி.எம்.எஸ். அங்கே தொடர்ந்து தன்னுடைய பணியை தொடர்கின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.